**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி**

**O.S. No.19/2019**

2025 ம் ஆண்டு மார்ச் மாதம் 10 -ம் நாள் வாதி தரப்பு சாட்சியின் வா.சா.2 வாக்குமூலம் 1969 ம் ஆண்டு இந்திய உறுதிமொழி சட்டம் விதிமுறைகளின் ஏற்பாட்டின்படி திருமதி. A. சீதாலெட்சுமி, M.A.,B.L. மாவட்ட உரிமையியல் நீதிபதி அவர்களால் கூறப்பட்டு உறுதி கூறப்படுகிறது.

**நாள் : 10.03.2025**

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | : வடிவேல் | ஜாதி | : | |
| த/பெயர் | : பொதியப்பன் | மதம் | : | |
| கிராமம் | : | தொழில் | : | |
| வட்டம் | : | வயது | : | |

வா.சா. 2 முன்னிலை பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

தாவா வழக்கானது ஜெகநாதன் என்பவரால் புஷ்பநாதன் என்பவருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. புஷ்பநாதன் தந்தையார் பெயர் பாலசுப்பிரமணியன். பாலசுப்ரமணியன் என்பவரிடமிருந்து கடந்த 2015 ஆம் வருடம் ஜெகநாதன் கிரையம் பெற்றார் என்றால் சரிதான். அந்த கிரைய பத்திரத்தில் நான் சாட்சி கையொப்பம் எதுவும் செய்யவில்லை. ஜெகநாதன் எவ்வளவு விஸ்தீரணம் கிரையம் பெற்றார் என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. பாலசுப்ரமணியன் தாவா சொத்து அ மைந்துள்ள இடத்தில் எவ்வளவு சொத்து வைத்திருந்தார் என்பது குறித்து தெரியுமா என்றால் தெரியாது. அவருக்கு சொந்தமான பூரா சொத்தையும் விற்றாரா அல்லது பகுதியை வாதியிடம் விற்றுவிட்டு பகுதி சொத்தை பாலசுப்பிரமணியன் வைத்துள்ளரா என்பது பற்றி தெரியுமா என்றால் தெரியாது. பிரதிவாதி வாதி ஜெகநாதன் சொத்திற்கு கிழக்கு பக்கத்திலுள்ளார். வாதி ஜெகநாதன் எந்த சர்வே எண்ணில் இருந்து வருகிறார் என்பது குறித்தும் எனக்கு தெரியாது. பிரதிவாதி எந்த சர்வே எண்ணில் இருந்து வருகிறார் என்பது குறித்தும் எனக்கு தெரியாது. தாவா சொத்தை பிரதிவாதியின் தகப்பனார் அனுபவம் செய்து வந்து அவரது இறப்பிற்கு பிறகு வாரிசு முறையில் பிரதிவாதி அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரிதான்.

பாலசுப்ரமணியன் வீடு ஆரம்ப முதல் கூரை வீடாதான் உள்ளது. வாதி பிரதிவாதி வீட்டிற்கு இடையே வேலி எதுவும் கிடையாது.  தாவா சொத்தில் யார் இருந்து வருகிறார்கள் என்பது குறித்தும், யாருடைய அனுபவத்தில் இருக்கிறது என்பது குறித்தும், தாவா சொத்தின் விஸ்தீரணம் குறித்து எனக்கு தெரியாது என்றாலும், வாதிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாம் சரியல்ல.

Taken down by me in Open Court and read over/interpreted to the witness and admitted by him/her to be correct

A SEETHALAKSHMI

Digitally signed by A SEETHALAKSHMI
Date: 2025.03.11 10:56:30 +0530

District Munsif

Mannargudi.